Australian Government

COVID-19 VACCINATION

# ‘கோமிர்நாட்டி’ (ப்ஃபைசர்) கோவிட்-19 தடுப்பூசி மருந்தினைப் பற்றிய தகவல்கள்

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: 15 செப்டம்பர் 2021

## இந்தத் தடுப்பூசி மருந்தினைப் பற்றி

**ப்ஃபைஸர்** எனும் தடுப்பூசி மருந்தானது ‘கோவிட்-19’-இல் இருந்து ஜனங்கள் சுகவீனமடைவதைத் தடுக்க இயலுமான ஒரு தடுப்பூசியாகும். பொதுவாக 3-6 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும் இரண்டு மருந்தளவுகள் தேவைப்படும் (விசேடமான சூழல்களில், இந்த இடைவெளியானது இன்னும் நீண்ட காலத்திற்கானதாக இருக்கலாம்). ‘ப்ஃபைசர் கோவிட்-19 தடுப்பூசி’ மருந்தில் உயிரோடு இருக்கும் வைரஸ் எதுவும் இல்லை, மற்றும் இதனால் உங்களுக்குக் ‘கோவிட்-19-ஐ ஏற்படுத்த இயலாது. ‘ஸ்பைக் புரதம்’ (spike protein) எனப்படும் ‘சார்ஸ்-கோவ்-2’ வைரஸ் (SARS-CoV-2)-இன் ஒரு முக்கிய அங்கத்திற்கான ‘மரபணுக் குறியீ’(genetic code)ட்டினை இது கொண்டுள்ளது. இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு, இந்த ‘ஸ்பைக் புரத’த்தின் பிரதிகளை உங்களுடைய சரீரம் உருவாக்கும், இதற்குப் பிறகு உங்களுடைய நோயெதிர்ப்புத் திறன் முறைமையானது ‘கோவிட்-19’ நோயை ஏற்படுத்தும் ‘சார்ஸ்-கோவ்-2’ வைரஸ்-ஐ அடையாளம் கண்டு அதனோடு போரிடக் கற்றுக்கொள்ளும். இந்த மரபணுக் குறியீட்டினை சரீரம் விரைவில் நொறுக்கிவிடும்.

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது ஒருவரது சுயவிருப்பம் மற்றும் இது இலவசம். ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதைப் பற்றிய எவ்வொரு கரிசனங்களோ, கேள்விகளோ உங்களுக்கு இருந்தால், தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெறுவதற்கு முன்பாக அவற்றைப் பற்றி உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநர் மற்றும்/அல்லது உங்களுடைய பொது மருத்துவ(GP)ருடன் நீங்கள் கலந்தாலோசிக்கலாம்.

## இந்தத் தடுப்பூசி மருந்தின் பலன்கள்

12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் ‘கோவிட்-19’-ஐத் தடுப்பதில் ‘ப்ஃபைசர்’ செயலூக்கம் உள்ளது என்று பெருமளவிலான ஒரு மருத்துவச் சோதனை-முயற்சி (clinical trial) காண்பித்தது. ‘ப்ஃபைசர்’ -இன் இரண்டு மருந்தளவுகளைப் பெற்றவர்களுக்கு அறிகுறிகளோடு கூடிய ‘கோவிட்-19’ ஏற்படும் சாத்தியம் இந்தத் தடுப்பூசி மருந்தினைப் பெறாதவர்களை விட 95 சத வீதம் குறைவாக இருந்தது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களிலும், மாறாமல்.

முதல் மருந்தளவைப் பெற்றதிலிருந்து ஏறத்தாழ 2-3 வாரங்களுக்குப் பிறகு ‘கோவிட்-19’-இற்கு எதிரான பாதுகாப்பு ஆரம்பமாகிறது. ஒரு மருந்தளவினால் சிறிது பாதுகாப்பினைக் கொடுக்க இயலக்கூடும் என்ற அதே வேளையில், அது ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கலாம். இரண்டு மருந்தளவுகள் அனுகூலமான பாதுகாப்பினைக் கொடுக்கும். எவ்வொரு தடுப்பூசி மருந்தும் 100 சதவீதம் செயலூக்கமானது அல்ல, ஆகவே தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகும் நீங்கள் ‘கோவிட்-19’-இனால் சுகவீனம் அடையக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டுள்ள ஒரு நபருக்கு ‘சார்ஸ்-கோவ்-2’ தொற்று இப்போதும் ஏற்படுவதற்கான சாத்தியம் இருக்கிறது. அவர்களுக்கு நோயறிகுறிகள் இல்லை என்றாலும், அல்லது அவர்களுக்கு இருக்கும் நோயறிகுறிகள் மிதமானவையே என்றாலும், அவர்களால் இதை மற்றவர்களுக்குக் கடத்த இயலுமாகலாம். ஆனாலும், தற்சமயம் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுகின்ற கோவிட்-19 தடுப்பூசிகள் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டுள்ள ஒரு நபருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டால் அவர் தன்னுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களுக்கு வைரஸை பரப்புவதற்கான சாத்தியம் இருப்பதைக் குறைப்பதில் மிகவும் செயல்திறன் மிக்கதாக இருக்கின்றன.

ஆகவேதான், தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு பின் வருவனவற்றைப் போன்ற மற்ற தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியது முக்கியமாகும்:

- உடல்ரீதி விலகல்
- கைச் சுத்திகரிப்பு
- முகக் கவசம் ஒன்றை அணிதல்
- உங்களுடைய மாநிலம்/எல்லைப்பகுதியினால் வேண்டப்படுவதற்கு ஏற்ப ‘கோவிட்-19’ நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளல் மற்றும் நோய்க்காப்புத்-தடை (quarantine)/தனிமைப்படுத்தல்.

‘ப்ஃபைசர்’ -இன் இரண்டு மருந்தளவுகளை நீங்கள் இட்டுக்கொண்டிருந்தாலும், உங்களுடைய உள்ளூர் சுகாதார அதிகாரத்தின் பிரகாரமான நோயறிவுச் சோதனையை அவசியப்படுத்தும் நோயறிகுறிகள் (உதாரணமாக, சுரம், இருமல், தொண்டை வலி) உங்களுக்கு இருந்தால் நீங்கள் இப்போதும் ‘கோவிட்-19’ நோயறிவுச் சோதனையை மேற்கொள்ள வேண்டும்.

## இந்தத் தடுப்பூசி மருந்தினை யார் பெற்றுக்கொள்ளலாம்

12 மற்றும் இதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்கள் ‘ப்ஃபைசர்’ தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

## இந்தத் தடுப்பூசி மருந்தினை யார் பெற்றுக்கொள்ளக் கூடாது

பின் வரும் தருணங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடாது:

- நீங்கள் முன்பு இட்டுக்கொண்ட mRNA 'கோவிட்-19' தடுப்பூசி (உதாரணமாக, 'ப்ஃபைசர்' அல்லது 'ஸ்பைக்வேக்ஸ்' (மொடெர்னா)) மருந்தளவு ஒன்றின் காரணமாக **'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis)** (இது ஒரு பாரதூரமான ஒவ்வாமை எதிர்ச்செயல்) எனும் ஒவ்வாமை உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- **இந்த 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் எவ்வொரு கலவைப்-பொருளையும்**, 'பாலிஈதைலீன் க்ளைகோல்' (polyethylene glycol (PEG)) என்பது உள்ளடங்க, **எதிர்கொண்டதன் காரணமாக உங்களுக்கு 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis)** ஏற்பட்டிருந்தால்
- முன்பு இடப்பட்ட mRNA 'கோவிட்-19' தடுப்பூசி (உதாரணமாக, 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா') மருந்தளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டது என்று சொல்லப்படும் **'மையோகார்டைட்டிஸ் (myocarditis) மற்றும்/அல்லது** 'பெரிகார்டைட்டிஸ்' (pericarditis) என்பன உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- அனுபவம் பெற்ற நோயெதிர்ப்பு-மருந்து வழங்குநர் அல்லது மருத்துவ வல்லுநர் ஒருவருடைய மீளாய்விற்குப் பிறகு, வேறொரு காரணம் அடையாளம் காணப்படாமல், முன்பு இடப்பட்ட mRNA 'கோவிட்-19' தடுப்பூசி (உதாரணமாக, 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா') மருந்தளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டது என்று சொல்லப்படும் **மற்ற எவ்வொரு பாரதூரப் பாதிப்பையும் ஏற்படுத்திய நிகழ்வு ஒன்று உங்களுக்கு** ஏற்பட்டிருந்தால்

## தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான முன்னெச்சரிக்கைகள்

தமது தடுப்பூசிகளை இட்டுக்கொண்ட பிறகு 30 நிமிட நேரம் வரைக்கும் கண்காணிப்பிற்காகக் காத்திருப்பது அல்லது ஒவ்வாமைக்கான சிறப்பு மருத்துவர் ஒருவருடன் கலந்தாலோசிப்பது போன்ற கூடுதல் முன்னெச்சரிக்கைகள் குறிப்பிட்ட சில நோய்-நிலைகள் உள்ளவர்களுக்குத் தேவைப்படக்கூடும். பின் வருவன உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்றால், உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குனருக்கு அதைத் தெரியப்படுத்துங்கள்:

- **முன்பு உங்களுக்கு இடப்பட்ட மருந்தளவு ஒன்றின் காரணமாக**, அல்லது mRNA 'கோவிட்-19' தடுப்பூசி (உதாரணமாக, 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா') மருந்தின் செய்பொருள் ஒன்றின் காரணமாக **உங்களுக்கு ஒவ்வாமை ஒன்று ஏற்பட்டிருந்தால்**
- **மற்ற தடுப்பூசி மருந்துகள் அல்லது மருந்துகளின் காரணமாக உங்களுக்கு 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis) எனும் ஒவ்வாமை** (இது ஒரு தீவிர ஒவ்வாமை எதிர்வினையாகும்) ஏற்பட்டிருந்தால். இப்போது நீங்கள் இட்டுக்கொள்ளும் தடுப்பூசி மருந்தில் முன்பு இருந்ததைப் போன்ற பொதுவான செய்பொருள்கள் ஏதும் இல்லை என்பதை உங்களுடைய தடுப்பூசி வழங்குநரால் சோதித்து உறுதிப்படுத்த இயலும்
- சிகிச்சை தேவைப்படும், மற்றும் மீண்டும் மீண்டும் ஏற்படும் 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis) எனும் ஒவ்வாமையுடன் கூடிய உறுதிப்படுத்தப்பட்ட 'மேஸ்டோசைடோசிஸ்' (mastocytosis) உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்.

**இரத்தக் கசிவுக் கோளாறு ஒன்று உங்களுக்கு இருந்தால்**, அல்லது நீங்கள் **இரத்த-மெலிதாக்கி மருந்து**(anticoagulant (இரத்த உறைவு-எதிர்ப்பி))**களை உட்கொண்டுவந்தால்**, அதை உங்களுடைய தடுப்பூசி மருந்து

வழங்குநருக்குத் தெரிவியுங்கள். தசைக்குள்ளாக செருகப்படும் ஊசிமருந்து ஒன்றை இட்டுக்கொள்வது உங்களுக்குப் பாதுகாப்பானதா என்று தீர்மானிக்கவும் ஊசியை இட்டுக்கொள்வதற்கு மிகவும் உகந்த நேரத்தை முடிவு செய்யவும் உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநரால் உதவ இயலும்.

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டிய விசேட சூழல்கள்

### 'ப்ஃபைசர்'-இற்கான முன்னெச்சரிக்கையை ஏற்படுத்தும் நோய் நிலைகள் உள்ளவர்கள்

பின் வரும் நோய்நிலைகளுக்கான வரலாறு உள்ளவர்கள் 'ப்ஃபைசர்'-ஐப் பெறலாம், ஆனால் தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கான சிறந்த நேரம் எது என்பதைப் பற்றியும், கூடுதல் முன்னெச்சரிக்கைகள் எதுவும் சிபாரிசு செய்யப்படுகின்றனவா என்பதைப் பற்றியுமான அறிவுரையை பொது மருத்துவர்(GP), நோயெதிர்ப்பு-மருந்து வழங்குநர் அல்லது இதய-நோய் வல்லுநர் ஒருவரிடமிருந்து அவர்கள் பெறவேண்டும்:

- சமீபத்தில் (அதாவது, கடந்த 6 மாதங்களுக்குள்) ஏற்பட்ட இதய அழற்சி நோய், உதாரணமாக 'மையோகார்டைட்டிஸ்' (myocarditis), 'பெரிகார்டைட்டிஸ்' (pericarditis), 'எண்டோகார்டைட்டிஸ்' (endocarditis) ஆகிய நோய்கள் உள்ளவர்கள்
- 'ருமாட்டிக் ஃபீவெர்' (rheumatic fever) எனப்படும் தீவிர மூட்டு, இதய-அழற்சிக் காய்ச்சல் (அதாவது, தீவிர இதயத் தசை அழற்சியுடன் கூடிய) அல்லது தீவிர 'ருமாட்டிக் இதய நோய்' உள்ளவர்கள்)
- கடுமையாக சீர்குலைவு அடைந்த இதய செயலிழப்பு ஏற்பட்டிருப்பவர்கள்.

### பலவீனமடைந்த நோயெதிர்ப்புத்-திறன் முறைமைகள் உள்ளவர்கள் (immunocompromise))

தமது நோயெதிர்ப்புத் திறன் முறைமைகளை பலவீனப்படுத்தும் மருத்துவ நோய்-நிலை ஒன்று உள்ளவர்கள் 'நோயெதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டவர்'(immunocompromise) களில் உள்ளடங்குவார்கள். தமது நோயெதிர்ப்புத் திறன் முறைமைகளை அடக்கும் மருந்துகளை எடுத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களும் 'பலவீனமடைந்த நோயெதிர்ப்புத்-திறன்' உள்ளவர்களில் அடங்குவர்.

பலவீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களைக் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளுமாறு ஆஸ்திரேலிய அரசாங்கம் வலிவாகப் பரிந்துரைக்கிறது. 'ப்ஃபைசர்' ஒரு உயிருள்ள தடுப்பூசி மருந்து அல்ல. பல்வீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களில் இது பாதுகாப்பானதாகும்.

HIV-யுடன் வாழ்ந்துவருபவர்கள் உள்ளடங்க, பலவீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களுக்குக் 'கோவிட்-19'-இல் இருந்து பாரதூரமாக நோய்வாய்ப்படும் அதியுயர் ஆபத்து இருக்கிறது, இதில் மரணம் அடையும் அதியுயர் ஆபத்தும் உள்ளடங்கும்.

மாறாமல் நிலையாக நின்றுவிட்ட HIV உள்ள ஒரு சிறு குழுவினரைத் தவிர, பலவீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களைக் 'ப்ஃபைசர்' தடுப்பூசி மருந்திற்கான 'மருத்துவ சோதனை-முயற்சிகள்' (clinical trials)

உள்ளடக்கவில்லை. மற்ற ஜனங்களோடு ஒப்பிடப்படும்போது, பலவீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களில் 'ப்ஃபைசர்' செயலூக்கமாக இருக்குமா என்று எமக்குத் தெரியாது. பொதுவான ஜனங்களில் 'ப்ஃபைசர்' -இற்கு இருக்கும் அதே செயலூக்கம் பலவீனமடந்த நோயெதிர்ப்புத் திறன் உள்ளவர்களில் இல்லாமல் இருப்பதற்கான சாத்தியம் இருக்கிறது. தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு, சமூக விலகல் போன்ற மற்ற தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவர வேண்டியது முக்கியம்.

## கர்ப்பமாக இருக்கும் அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்கள்

கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கும் வளர்-இளம் பருவத்தினருக்கும், அவர்களது கர்ப்பகாலத்தின் எவ்வொரு கட்டத்திலும், 'நடைமுறைப்படி 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா' அளிக்கப்படவேண்டும். நீங்கள் கர்ப்பமடைய முயற்சித்துக்கொண்டிருந்தால், தடுப்பூசியை இட்டுக்கொள்வதை நீங்கள் தாமதப்படுத்த வேண்டியதில்லை, அல்லது தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு கர்ப்பம் அடைவதைத் தவிர்க்க வேண்டியதில்லை.

'கோவிட்-19' உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்குத் தீவிர நோய்க்கும், பாதகமான கர்ப்பகால விளைவுகளுக்கும் ஆளாகும் ஆபத்து அதிகமாக இருக்கும். கர்ப்பிணிப் பெண்களுக்கும், தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கும் 'ப்ஃபைசர்' பாதுகாப்பானது என்று யதார்த்த-உலக ஆதாரம் காண்பித்துள்ளது.

நீங்கள் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருந்தால், நீங்கள் 'ப்ஃபைசர்' -ஐ இட்டுக்கொள்ளலாம். தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தவேண்டியதில்லை.

## 'கோவிட்-19'-இற்கான வரலாறு உள்ளவர்கள்

உங்களுக்குக் 'கோவிட்-19' ஏற்பட்டிருந்தால் அதை உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்குச் சொல்லுங்கள். சார்ஸ்கோவ்-2 நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களுக்கு அவர்கள் கடுமையாக நோயுற்ற பிறகு ஆறு மாதங்கள் வரை தடுப்பூசி இட்டுக்கொள்வது ஒத்திவைக்கப்படலாம், ஏனெனில் கடந்தகாலத்தில் ஏற்பட்ட நோய்த்தொற்று குறைந்தது 6 மாதங்களுக்கு அவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆனாலும், அறிகுறியுள்ள நோய்த்தொற்றிலிருந்து அவர்கள் குணமடைந்தவுடன் தடுப்பூசி இட்டுக்கொள்வதைத் தொடங்கலாம். சில பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து 6 மாதங்களுக்கு முன்னதாகவே தடுப்பூசி போட்டுக்கொள்வது பொருத்தமானதாக இருக்கலாம். உங்களுடைய மருத்துவர் நோயெதிர்ப்புத் திறனேற்றல் சேவை வழங்குநருடன் கலந்தாலோசியுங்கள். 'கோவிட்-19' காரணமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் நோய் ஒன்று உங்களுக்கிருந்தால், தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு மிகச் சரியான நேரம் எது என்பதை உங்களுக்கு சிகிச்சையளித்துவரும் மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்.

## 'ப்ஃபைசர்' தடுப்பூசியும் குழந்தைகளும்

12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்களுக்கு 'ப்ஃபைசர்' தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, மற்றும் இதற்குக் குறைந்த வயதுள்ளவர்களுக்கு இதைக் கொடுக்க இயலாது.

## 'ப்ஃபைசர்'-இன் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

தடுப்பூசி மருந்துகளைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்கான அதிகரிக்கப்பட்ட நிதியுதவியும், ஆராய்ச்சி ஆய்வுகளுக்காகக் கிடைத்த பெரும்

எண்ணிக்கையிலான சுயவிருப்பு முன்வருகையாளர்களும் ‘ப்ஃபைசர்’ தடுப்பூசியும் மற்ற ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளும் விரைவாக உருவாக்கப்பட்டுள்ளதற்கான காரணங்களாகும். ஏறத்தாழ 44,000 மக்கள் ஈடுபாடுகொண்ட பெரும் ‘மருத்துவ சோதனை-முயற்சி’ (clinical trial) ஒன்று ‘ப்ஃபைசர்’ பாதுகாப்பானதும், செயலூக்கமானதுமாகும் என்பதை உறுதிப்படுத்தியது.

ஆஸ்திரேலியாவில் அனைத்துத் தடுப்பூசி மருந்துகளையும் ‘மருத்துவ சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்’ (The Therapeutic Goods Administration) எனும் அமைப்பு மதிப்பீடு செய்கிறது. அங்கீகரிக்கப்படுவதற்காக, தடுப்பூசி மருந்து ஒன்று பாதுகாப்பானதாகவும், செயலூக்கம் உள்ளதாகவும், மிக உயர்ந்த தர நிலை கொண்டதாக உற்பத்திசெய்யப்படுவதாகவும் இருப்பதை இது உறுதிப்படுத்துகிறது. ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளுக்கான அங்கீகார செயல்பாட்டு முறையைப் பற்றிய விளக்கம் ஒன்று TGA-யினரது வலைத்தல(TGA website)த்தில் கிடைக்கும்.

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்திடல் திட்டம் நெடுக ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளின் பாதுகாப்பானது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவரும்.

‘கோவிட்-19 தடுப்பூசி மருந்து - ஆஸ்ட்ரா-ஸெனெகா’ வை இடுக்கொண்ட பிறகு குறைந்த ‘இரத்த வட்டு’களோடு கூடிய இரத்த உறைவு சம்பந்தப்பட்ட மிகவும் அரிதான பக்க விளைவு ஒன்றைப் பற்றிய அறிவிப்புகள் உள்ளன. ‘கோவிட்-19 தடுப்பூசி மருந்து - ஆஸ்ட்ரா-ஸெனெகா’ வித்தியாசமான ஒரு வழியில் தயாரிக்கப்படுகிறது. ‘ப்ஃபைசர் கோவிட்-19 தடுப்பூசி மருந்து’டன் இந்த நோய்-நிலை சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை நீங்கள் உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்கோ, மற்ற சுகாதாரப் பராமரிப்புத் தொழிலருக்கோ தெரியப்படுத்தலாம். அதையடுத்து, அவர்கள் உங்கள் சார்பாக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதாரத் துறைக்கு, அல்லது நேரடியாக TGA-யிற்கு சம்பிரதாயப்படியான அறிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள்.

இதை நீங்களாகவே தெரியப்படுத்த விரும்பினால், ‘கோவிட்-19’ தடுப்பூசிகளோடு சம்பந்தப்பட்ட சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை எவ்வாறு தெரியப்படுத்துவது என்பதைப் பற்றிய தகவல்களுக்காக தயவுசெய்து TGA-யினரது வலைத்தல(TGA website)த்திற்குச் செல்லுங்கள்.